# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி
## மதிப்பீட்டுத் தாள் 2023 – 2024
## வளர்தமிழ் 5

TEDC

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 150 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

TEDC

## 1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. உயிர்மெய் எழுத்துகள் ______________ .
( 247, 216, 30 )

2. உடுக்கை என்பதன் பொருள் ________________ .
( உடை, இடுக்கண், கை )

3. பொன்னை உருக்கி அணிகலன்களைச் செய்பவர்
________________ .
( பொற்கொல்லர், நெசவாளர், உழவர் )

4. சிற்பக்காடாகக் காணப்படும் இடம் ________________ .
( பொலநறுவை, மதுரை, மாமல்லபுரம் )

5. இரை என்பது ________________ .
( நிறம், இறகு, உணவு )

6. தனது அரச ஆடை அணிகலன்களையும் உடைவாளையும் களைந்து அரண்மனை வாழ்வைத் துறந்தவர் ________________ .
( இளங்கோ, செங்குட்டுவன், சங்கிலியன் )

7. நாவரசி தமிழில் அஞ்சல் எழுதினாள். பெற்றோரும் அவளுக்கு அஞ்சல் ________________ .
( எழுதினான், எழுதினார்கள், எழுதும் )

TEDC

8. பல்லவ மன்னர்களால் வரையப்பட்ட சிறந்த ஓவியங்கள் ________________ காணப்படுகின்றன.

( சிகிரியாவில், சித்தன்னவாசலில், நல்லூரில் )

9. **பழமொழி:**

________________ கொடியும் திரண்டால் மிடுக்கு.

( வெற்றிலை, முல்லை, அடம்பன் )

10. இராசராசசோழனின் இயற்பெயர் ________________ .

( அருண்மொழித்தேவன், நரசிம்மன், கோப்பெருஞ்சோழன் )

11. உலகில் அழியாது உயர்ந்து நிற்பது ________________ .

( பொருள், புகழ், பணம் )

12. கூத்து, நட்டம், நடம் என அழைக்கப்படும் கலை ________________ .

( ஆடற்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை )

13. ________________ பழந்தமிழரது பண்பாட்டு வரலாற்றைக் கூறுகின்றது.

( திருக்குறள், சிலப்பதிகாரம், ஆத்திசூடி )

14. தண்ணீர் என்பதன் எதிர்ச்சொல் ________________ .

( குளிர்நீர், வெந்நீர், நீர் )

TEDC

15. நாங்கள் நாள்தோறும் காய்கறிகளையும் பழங்களையும் ________________ வேண்டும்.

( உண்டு, உண்ண, உண்பது )

16. எண்ணெய் இல்லை;திரியும் இல்லை; ஏற்றி வைக்க ஆளுமில்லை ஆனாலும் அணையாது வெளிச்சம் தருவது ________________ .

( மின்விளக்கு, கதிரவன், விளக்கு )

17. பொங்கல் அன்று ________________ எழுந்து நீராடிப் புத்தாடை அணிவர்.

( வைகறையில், நண்பகலில், மாலையில் )

18. காடும் காடு சார்ந்த இடமும் ________________ .

( குறிஞ்சி, முல்லை, நெய்தல் )

19. ________________ தமிழ் நூல்கள் எங்கே இருக்கின்றன?

( நான், உங்களது, அவர்கள் )

20. பூ + செடி ________________

( பூசெடி, பூம்செடி, பூச்செடி )

21. வரண்ட நிலச்செடிகள் ________________ .

( நாகதாளி,முள்ளி, நாகதாளி, முல்லை, நாகதாளி, மல்லிகை )

TEDC

22. மாணவர்கள் வகுப்பறையில் இருந்தனர். ________________ அழகான ஓவியங்களை வரைந்தனர்.

( அவை, அவர்கள், அவன் )

23. நிலத்தை உழுது பயிரிட்டு வாழ்பவர் ________________ .

( பரதவர், குறவர், உழவர் )

24. ஈரூடக உயிரிகளில் ஒன்று ________________ .

( மீன், தவளை, முயல் )

25. வெடியோசை கேட்டதும் சிறுமியின் இதயம் ________________ என அடித்தது.

( கலகல, படபட, பளபள )

26. "கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மை ... "என்ற பாடல் இடம்பெற்ற நூல் ________________ .

( மூதுரை, நல்வழி, நாலடியார் )

27. எறும்புகள் ________________ ஊர்ந்து செல்கின்றன.

( குறுக்கும்நெடுக்குமாக, கோணல்மாணலாக, சாரிசாரியாக )

28. 80 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ________________ .

( என்பது, எண்பது, எண்வது )

29. ஆத்திசூடி ________________ எழுதப்பட்டது.

( பாவேந்தரால், திருவள்ளுவரால், ஔவையாரால் )

30. நாய் குரைக்கும். அது போல வாத்து ________________ .

( கத்தும், கூவும், கரையும் )

புள்ளிகள் 30

TEDC

## 2) அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களைக் கீறிட்ட இடங்களில் பொருத்தமாக மாற்றி எழுதுக.

1. திருக்குறள் ______________ ஒன்று. பாவலன் ______________ விரும்பிப் படிப்பான். ( அறநூல்கள் )

2. பண்டாரவன்னியன் ______________ எதிர்த்தான். அவன் ______________ போரிட்டான். ( ஆங்கிலேயர் )

3. ______________ ச் சென்ற இடமெல்லாம் சிறப்பு. நாங்கள் ______________ சேர்ந்தால் வாழ்வில் சிறக்கலாம். ( கற்றோர் )

4. மாணவர்கள் ______________ ச் சென்றனர். அவர்கள் ______________ நூல்களை வாசித்தனர். ( நூலகம் )

5. நாம் ______________ பல பயன்களைப் பெறுகின்றோம். அதனால் நாம் ______________ ப் போற்றி வணங்குகின்றோம். ( கதிரவன் )

TEDC

புள்ளிகள் 10

## 3) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்து எழுதுக.

| | | |
|---|---|---|
| நிறைந்து | பழுத்த | புகழ்ந்து |
| சென்ற | நடந்து | |

1. யாழ்ப்பாணத்துக்குச் ________________ எழிலன் சங்கிலியன் சிலையைப் பார்த்தான்.

2. இசை விழாவில் வெற்றி பெற்ற மாணவனை எல்லோரும் ______________ பாராட்டினர்.

3. மூதாட்டி வீதி ஓரமாக ________________ சென்றார்.

4. வயற்கரையில் தென்னந்தோப்புகள் ________________ காணப்படுகின்றன.

5. மரத்திலிருந்து ________________ பழங்கள் கீழே வீழ்கின்றன.

TEDC

புள்ளிகள் 05

## 4) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. பாரிசு நகரில் மக்கள் செறிந்து ________________ .

   ( வாழ்கின்றனர், வாள்கின்றனர் )

2. வேடன் விரித்த ________________ பறவைகள் சிக்கிக் கொண்டன.

   ( வளையில், வலையில் )

3. அம்மாவின் சேலையில் தேநீர்க் ________________ படிந்திருந்தது.

   ( கரை, கறை )

4. தமிழர் விழாக்காலங்களில் அழகான ________________ இடுவர்.

   ( கோலங்களை, கோளங்களை )

5. அப்பா சென்ற மாதம் ________________ இருந்து ஓய்வு பெற்றார்.

   ( பனியில், பணியில் )

| புள்ளிகள் 05 |
|---|

TEDC

## 5) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

| | | |
|---|---|---|
| தரையில் | முல்லைக்கொடியை | மன்னன் |
| தேரை | வாழ்ந்தனர் | |

பாரி ஒரு குறுநில ________________. அவன் சிறந்த வள்ளல். அவனது ஆட்சியில் மக்கள் மகிழ்ச்சியாக________________ . பாரி பறம்புமலையை ஆண்டான். ஒரு நாள் பாரி காட்டுவழியில் தேரில் சென்று கொண்டிருந்தான். அப்போது ஒரு ________________ க் கண்டான். அது படரக்கொழுகொம்பின்றித் ________________ கிடந்தது. அதன் மீது இரக்கம் கொண்ட பாரி முல்லைக்கொடி படரத் ________________ விட்டு, அரண்மனைக்கு நடந்து சென்றான்.

புள்ளிகள் 10

TEDC

## 6) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

ஓர் அழகான குளம். அக்குளத்தில் கொட்டியும் ஆம்பலும் மலர்ந்திருந்தன. குளத்தைச் சுற்றிப் பசுமையான மரங்கள் வளர்ந்திருந்தன. அவற்றின் கிளைகளில் கொக்கு, நாரை, மீன்கொத்தி போன்ற நீர்ப்பறவைகள் வாழ்ந்தன. கோடை வெப்பத்தினால் நீர்நிலைகள் வற்றின. புற்றரைகளும் செடி கொடிகளும் கருகிப் போயின. நீர்ப்பறவைகள் வேறு நீர் நிலைகளை நாடிச் சென்றன. ஆனால் கொட்டியும் ஆம்பலும் குளத்தின் மண்ணோடு மண்ணாகக் காய்ந்து கிடந்தன. நீர்ப்பறவைகள் போல இடர் நேர்ந்தால் விட்டு விலகுபவர்கள் உறவினர் அல்லர். நீர்ச் செடிகளைப் போல் இன்பத்திலும் துன்பத்திலும் பங்கு கொள்பவர்களே உண்மையான உறவினர்கள் ஆவர்.

1. கொட்டியும் ஆம்பலும் எங்கே மலர்ந்திருந்தன?

_______________________________________________

2. எவை குளத்தைச் சுற்றி வளர்ந்திருந்தன?

_______________________________________________

_______________________________________________

3. நீர்ப்பறவைகள் இரண்டைத் தருக.

_______________________________________________

4. நீர் நிலைகள் ஏன் வற்றின?

_______________________________________________

_______________________________________________

5. யார் உண்மையான உறவினர்கள்?

_______________________________________________

_______________________________________________

| புள்ளிகள் 10 |
|---|

TEDC

## 7) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. தமிழகத்திலேயே மிகப்பெரிய சிவலிங்கத்தைக் கருவறையில் கொண்டுள்ள கோவில் எது?

_______________________________________________

2. திருக்குறளை வேறு எப்படி அழைப்பர்?

_______________________________________________

3. பொங்கலோடு எவற்றைச் சேர்த்துக் கதிரவனுக்குப் படைப்பர்?

_______________________________________________

4. கதிரவனால் கிடைக்கும் நன்மைகள் இரண்டைத் தருக.

_______________________________________________

5. தமிழரின் வெற்றியுடன் தொடர்புடைய மலர் எது?

_______________________________________________

6. வயலும் வயல் சார்ந்த இடமும் எவ்வாறு அழைக்கப்படும்?

_______________________________________________

7. பழந்தமிழர் எதன் அடிப்படையில் குமுகாயத்தை அமைத்தனர்?

_______________________________________________

TEDC

புள்ளிகள் 10

**8) தரப்பட்டுள்ள சொல்லியங்களை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

1. நான் தமிழ்ப் பள்ளிக்குச் செல்கின்றேன்.

______________________________ .

2. எனது வகுப்பில் இருபது மாணவர்கள் இருக்கின்றார்கள்.

______________________________ .

3. எனக்கு அருகே எனது நண்பன் முகிலன் இருப்பான்.

______________________________ .

4. நான் எனது நண்பனுடன் சேர்ந்து படிப்பேன்.

______________________________ .

5. எனது ஆசிரியர் மிகவும் நல்லவர்.

______________________________ .

புள்ளிகள் 05

TEDC

**9) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 60 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ இளங்கோவடிகள்
- ✸ ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
- ✸ விலங்ககம்
- ✸ எனது அப்பா

| புள்ளிகள் 15 |
|---|

TEDC